<u>முதன்மை சார்பு நீதிமன்றம், ஈரோடு, ஈரோடு மாவட்டம்.</u>

OS.No.583/2020 பெயர்- சம்பத் நாள்.08.08.2023

வா.சா.1 ஆஜர். சத்திய பிரமாணத்தின்பேரில் விசாரணை செய்யப்பட்டார்.

**பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி-**

பிரதிவாதியின் மகன் மோகன்ராஜ் உடல்நிலை சரியில்லாமல் இருந்தார் என்பது எனக்கு தெரியுமா என்றால் முதலில் எனக்கு தெரியாது, பின்னிட்டு வழக்கறிஞர் அறிவிப்பு வந்ததற்கு பிறகு தெரிந்துகொண்டேன். என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் 6 வது பத்தியில் பிரதிவாதியின் மகன் மருத்துவ சிகிச்சைக்காக கடன் பெற்றார் என்பதை பிரதிவாதி மறுக்க இயலாது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். தாவா தாக்கல் செய்த சமயத்தில் மோகன்ராஜின் சொத்தை ஜப்தி செய்ய ஒரு மனு தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். அதில் குறிப்பிட்டுள்ள சொத்து எங்குள்ளது என்ற விவரங்கள் எனக்கு தெரியாது. மேற்படி சொத்து மோகன்ராஜ்க்கு பாத்தியப்பட்டது என்று எவ்வாறு தெரிந்துகொண்டேன் என்றால் VAO மூலம் தெரிந்துகொண்டேன். மேற்படி மனுவில் எத்தனை அயிட்ட சொத்துக்கள் காட்டப்பட்டுள்ளது என்றால் நினைவில் இல்லை. மேற்படி மனுவில் கண்ட சொத்துக்கள்தான் என்னுடைய மைத்துனர் பழனிச்சாமியால் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கிலும் காட்டப்பட்டுள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. மோகன்ராஜ்க்கும் எனக்கும் வரவு செலவு எதுவும் இல்லை என்றாலும், பழனிச்சாமி எனது பெயரில் இந்த வழக்கை பொய்யாக தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. மேற்படி சொத்து குறித்து நிலத்தின் அருகில் உள்ள நபருடன் பரிவர்த்தனை ஏற்பட்டது என்றாலும், அதுகுறித்து பழனிச்சாமி ஒரு வழக்கு தொடர்ந்துள்ளார் என்றாலும், அதுபற்றி எனக்கு தெரியாது. எனக்கு இந்த வழக்கில் குறிப்பிட்டுள்ள தொகையை கடன் கொடுக்கும் அளவிற்கு வசதி இல்லை என்றால் சரியல்ல. எனக்கும், மோகன்ராஜ்க்கும் நேரடியாக எந்தவொரு வரவு செலவும் இல்லை என்றால் சரியல்ல. மோகன்ராஜ்க்கு அசையும் மற்றும் அசையா சொத்துக்கள் உள்ளதாக எனது பிராதில் குறிப்பிட்டுள்ள சங்கதிகள் எதுவும் எனக்கு தெரியாது என்றாலும், அவை அனைத்தும் மோகன்ராஜ் சொன்னதின் அடிப்படையில் குறிப்பிடப்பட்டுள்ளவை என்றாலும் சரியல்ல. அதனால்தான் வயதான படிப்பறிவு இல்லாத மோகன்ராஜின் தாயாரிடம் இருந்து சொத்தை அபகரிக்கவேண்டும் என்ற எண்ணத்தில் நானும், என்னுடைய மைத்துனர் பழனிச்சாமியும் சேர்ந்து பொய்யான சங்கதிகளை குறிப்பிட்டு வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. இந்த வழக்கு அவசரகதியில் தாக்கல் செய்யப்பட்ட காரணத்தினால்தான் மோகன்ராஜ் சொத்தில்

இருந்து பரிகாரம் கேட்கப்படாமல் மோகன்ராஜ் தாயார் துளசியம்மாள் மீது தனிபட்ட வகையில் பரிகாரம் கேட்கப்பட்டுள்ளது என்றாலும், மேற்படி பரிகாரம் சட்டப்படி கிடைக்கத்தக்கதல்ல என்றாலும் சரியல்ல. வழக்கு காலவரையறை தோசத்தால் பாதிக்கப்பட்டது என்றால் சரியல்ல. என்னிடமோ, பழனிச்சாமியிடமோ மோகன்ராஜ் எந்த காலத்திலும் கடன் எதுவும் வாங்கவில்லை என்றாலும், மோகன்ராஜ் இறந்ததற்கு பின்னிட்டு, அவருடைய வயதான படிப்பறிவு இல்லாத தாயாரிடம் இருந்து சொத்தை அபகரிக்கவேண்டும் என்ற எண்ணத்தில் நானும், என்னுடைய மைத்துனர் பழனிச்சாமியும் சேர்ந்து பொய்யான சங்கதிகளை குறிப்பிட்டு வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. எங்களுடைய தரப்பில் வேறு சாட்சிகள் உண்டா என்றால் உண்டு. யாரை விசாரிக்கபோகிறோம் என்றால் கேட்டுதான் சொல்லமுடியும். மைத்துனர் பழனிச்சாமியை பார்த்து 3 வருடம் இருக்கும். என்னுடைய மைத்துனர் பழனிச்சாமியின் ஊரில் ஏதாவது நிகழ்ந்தால் அவர்தான் சொல்வார். என்னுடைய மைத்துனர் பழனிச்சாமி நகைக்கடை வைத்துள்ளார். கடன் பெற்றதாக சொல்லப்படும் மோகன்ராஜ் நான் கடன் கொடுத்ததாக சொல்லப்படும் தேதியில் தனிபட்ட வகையில் நடமாட முடியாத நிலையில் உடல்நிலை சரியில்லாமல் இருந்தார் என்றால் சரியல்ல. நான் கடன் கொடுத்ததாக சொல்லும் தேதியில் அவர் பெயரில் ரூ.5,00,000/- வைப்பீடு இருந்தது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.